19th August 1961]

யில் இருக்கிற சாராயம், கள் போன்றவைகளை விரும்புகிறவர்களுக்கு பெர்மிட் மூலம் வழங்க அரசாங்கம் ஏற்பாடு செய்து இதைத் தடுக்க முடியுமே, அதைப்பற்றி யோசிக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : குடிப்பழக்கம் மட்டுமல்ல. எவ்வளவோ கெட்ட பழக்கங்கள் மனிதர்களிடம இருக்கின்றன. அதற்காக அதைத் திருப்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வது சரியல்ல.

SRI N. K. PALANISAMI : Since 'Arishtam' contains iron contents, will the Government take steps not to prohibit such medicines?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I may tell the hon. Member that there is no proposal to prohibit 'Arishtam' as such. Whether it is 'arishtam' or any other drug on examination and analysis if it is found to contain too much alcohol then action will be taken.

SRI A. A. RASHEED : May I know, Sir whether on the pretext of prohibition toilet preparation required for the ladies have been declared as spurious?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have no such information, Sir.

SRI A. V. P. ASAITHAMBI : உடல் அலுப்பு தீருவதற்காக பலர் கள், சாராயம் போன்றவைகளைக் குடிப்பதில் கெடுவதில்லை என்று நிபுணர்கள் சொல்கிறார்கள். எனவே, அளவோடு குடிப்பதற்கு விரும்புகிறவர்களுக்கு பெர்மிட் கொடுத்தால் இந்தமாதிரி ஏற்படாமல் இருக்குமே, ஆகவே அரசாங்கம் இதைப் பரிசீலிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அரசியல் அமைப்புச் சட்டம் இருக்கிறது. நாம் இயற்றியிருக்கும் மதுவிலக்குச் சட்டம் இருக்கிறது. இந்தச் சட்டத்தின்கீழ்தான் நடவடிக்கைகள் எடுக்கிறோம். அதை மீறி அரசாங்கம் ஒன்றும் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள முடியாது.

SRI M. P. PERIASAMY : அளவுக்கு மீறி குடித்து அதிக போதை உள்ளவர்களுக்கு குறைந்த தண்டனையும், நிதானமாக குடித்தவர்களுக்கு தண்டனை அதிகம் என்ற முறையில் அரசாங்கத்தில் சட்டம் ஏதாவது இருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தண்டனை கொடுப்பது கோர்ட்டார், அரசாங்கமல்ல.

Glue factory

* 1271 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு ஜில்லாவில் 'கம்' (glue) தயார் செய்யும் தொழிற்சாலை ஆரம்பிக்கும் உத்தேசமுண்டா ?

[19th August 1961

(இ) எந்த ஊரில் ?

(உ) எவ்வளவு மூலதனம் ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) No, Sir.

(b) & (c) Does not arise.

Lift Irrigation Scheme

* 1272 Q.—SRI A. VEDARATHNAM : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1961-ம் வருஷம் ஜனவரி மாதம் 20-ம் தேதி சட்ட மன்றத்தில் 17-வது எண் கேள்விக்கு அளித்த பதிலையொட்டி திருத்துறைப்பூண்டி தாலூக்காவிலுள்ள லிப்ட் இரிகேஷன் திட்டம் பாக்கேஜ் டீல் மூலமாக எடுத்துக்கொள்ளப்படுமா ?

(இ) அப்படியானல் எப்போது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (1) No, Sir.

(2) Does not arise.

DEPUTY SPEAKER : I think Question No. 1273 may also be taken up and answered. After it is answered the hon. Member, Sri A. Vedarathnam can put the supplementary question.

1273 Q.—SRI A. VEDARATHNAM : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த சபையில் 17-வது கேள்விக்கு 1961-ம் வருஷம் ஜனவரி மாதம் 20-ம் தேதியில் அளித்த பதிலையொட்டி Ford Foundation Package Deal மூலம் Filter Point கிணறுகளும் Bore Wells தோண்டவும் எத்தனை பவர் டிரில்கள் தஞ்சை ஜில்லாவில் வைக்கப்பட்டிருக்கின்றன ?

(இ) இதுவரை இத்தகைய கிணறுகள் எத்தனை தோண்டப்பட்டிருக்கின்றன ?

(உ) இத் திட்டத்தின் மூலமாக Lift Irrigation திட்டம் ஏதேனும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா ? எத்தனை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Nil.

(b) & (c) Do not arise.

SRI A. VEDARATHNAM : பாக்கேஜ் டீல் அமுலில் உள்ள பிரதேசங்களில் இந்த லிப்ட் இர்ரிகேஷனை போர்ட் பவுண்டேஷன் எடுத்துக் கொள்ளும்படி நமது அரசாங்கம் ஏதாவது முயற்சி செய்திருக்கிறதா ? இல்லையெனில் அதைச் செய்ய முன்வருமா ? லிப்ட் இரிகேஷன் கூட சாத்தியம் இல்லாத இடங்களில் பில்டர் பாயின்ட் மூலம் இர்ரிகேஷனுக்கு கொடுக்க போர்ட் பவுண்டேஷன் உதவியை அரசாங்கம் நாட முன்வருமா ? அப்படியானல் இதன் விவரம் என்ன ?